## ‘ஆறிலிருந்து அறுபது வரை’ தமிழ்த் திரைப்படம் மற்றும் மலேசியத் தமிழ் சிறுகதைகளில் வெளிப்படும் தமிழர்களின் சமூகவியல் வாழ்வாதாரம்

## A Review of Tamils’ Sociological Livelihood Portrayed in the Tamil Film ‘*Aaril Irunthu Arupathuvarai*' and Malaysian Tamil Short Stories

ரவிந்திரன் மாரையா/ Ravindaran Maraya[1]

சில்லாழி கந்தசாமி / Silllalee S.Kandasamy[2]

அஸ்வினி கண்ணப்பன் / Ashwini Kannappan[3]

**Abstract**

This research article aims to identify the sociological livelihood that emerged in the Tamil film ‘*Aarilirunthu Arubathu Varai*’ and to discover how these ideas are displayed in Malaysian Tamil literature (Short Stories). This qualitative study identifies six prime sociological ideas, such as alcoholism, lack of emphasis on education, poverty-stricken society, lack of love towards family, the dominance of the upper class, and financial problems (debt), and how these sociological are displayed in Malaysian Tamil literature.

Date of submission: 2022-11-17
Date of acceptance: 2022-11-30
Date of Publication: 2022-12-28
Corresponding author’s Name: Dr K.Silllalee
Email: silllalee@um.edu.my

**Keywords**: Tamil film, ஸ்hort stories, Sociological livelihood, Malaysian Tamil Literature, Social thinking.

### முன்னுரை

திரைப்படம் என்பது காட்சிகள் நிறைந்த ஒரு படைப்பாகவும், நுட்பம் நிறைந்த கலையாகவும் விளங்குகின்றது. பாரம்பரியக் கலை வடிவங்களான ஓவியம், நாடகம், சிற்பம் மற்றும் பல கலைகளைக் காட்டிலும் திரைப்படம் எனும் கலையானது தனித்துவமான அம்சங்களைத் தன்னுள் அடக்கியுள்ளது (இரத்தினசபாபதி, 2019). திரைப்படம் மனிதச் சமூகத்தில் நிகழும் ஒவ்வொரு வாழ்வியல் விழுமியங்களையும்

[1] The author is a Senior Lecturer in the Department of Indian Studies, University Malaya, Kuala Lumpur, Malaysia. ravindaranm@um.edu.my
[2] The author is a Senior Lecturer in the Department of Indian Studies, University Malaya, Kuala Lumpur, Malaysia. silllalee@um.edu.my (Corresponding author)
[3] The author is an undergraduate at Department of Indian Studies, Faculty of Arts and Social Science. Ashwinikannappan.ak@gmail.com

பிரதிபலிக்கும் காலக்கண்ணாடியாக விளங்குவதால் மக்களின் அன்றாட வாழ்க்கையில் ஓர் அங்கமாகவே திரைப்படம் நிலைப்பெற்றுவிட்டது (Bordwell & Thompson,2010). மேலும், திரைப்படமானது மக்கள் மத்தியில் மனமகிழ் சாதனமாக மட்டும் விளங்காமல் பார்ப்போரின் உணர்வுகளைத் தொட்டு சிந்தனையைத் தூண்டும் ஆளுமையைப் பெற்றுள்ளது (சில்லாழி, 2017).

**ஆய்வு நோக்கம்**

'ஆறிலிருந்து அறுபது வரை' என்ற தமிழ்த் திரைப்படத்தில் குடும்பச் சமூகவியல் வாழ்க்கையில் வெளிப்படும் சமூகவியல் கருத்துக்களைக் கண்டறிந்து, அக்கருத்துக்கள் மலேசியத் தமிழ் இலக்கியத்தில் எவ்வாறு வெளிப்பட்டுள்ளது என்பதைக் கண்டறிவது இவ்வாய்வுக் கட்டுரையின் நோக்கமாக விளங்குகின்றது.

**ஆய்வு முன்னோடி**

இந்த ஆய்வுக்கு அடித்தளம் அமைத்துக் கொடுத்தப் பல ஆய்விதழில் மிக முக்கியமாக விளங்குவது 'ஆண்டாள்' மலேசியத் திரைப்படம் முன்னிருத்தும் சமுதாய அவலங்கள் என்ற தலைப்பில் முனைவர் சில்லாழியும் பேராசிரியர் முனைவர் மு. இரேசேந்திரனும் இணைந்து 2017 ஆம் ஆண்டு எழுதிய ஆய்வுக்கட்டுரையாகும். இவ்வாய்வுக் கட்டுரையில் இளம் வயதில் பக்குவமற்ற காதல், விலைமாதர் தொடர்பு, போதைப்பழக்கம் ஆகிய மூன்று முக்கியச் சமுதாய அவலங்கள் கண்டறியப்பட்டுள்ளது. மேலும், இளம் வயதில் பக்குவமற்ற காதலினால் மேற்கொண்ட முடிவுகள் பிற அனைத்து சமூக அவலங்களுக்கும் காரணக்கர்த்தவாக அமைந்துள்ளது என்பதைக் கோடிட்டுக் காட்டுகின்றன.

அதனைத் தொடர்ந்து, மலேசிய இந்தியர்களிடையே குண்டர் கும்பல் சிக்கல்: எதிர்காலம் திரைப்படம் ஓர் ஆய்வு என்ற தலைப்பில் முனைவர் சில்லாழி, பேராசிரியர் முனைவர் மு. இரேசேந்திரன் மற்றும் மதனா ஆகியோரின் கைவண்ணத்தில் 2020 ஆம் ஆண்டு எழுதப்பெற்ற ஆய்வுக்கட்டுரை. இவ்வாய்வில் எதிர்காலம் திரைப்படத்தில்

குண்டர் கும்பல் சிக்கலையும் அதன் உண்மைத் தன்மையையும் ஆராயப்பட்டுள்ளது. குண்டர் கும்பலில் ஈடுபடும் மலேசிய இந்தியர்கள் தங்களின் வாழ்க்கையைச் சீரழித்துக் கொள்வதோடு அவர்களோடு சார்ந்திருப்பவர்களும் பாதிப்படைகின்றனர். மேலும், இத்திரைப்படம் உண்மைச் சம்பவங்களின் பிம்பாகவே காட்சிப்படுத்தப்பட்டுள்ளது என்பதையும் எடுத்துரைக்கிறது.

மேலும், யூட் டினேஸ் கொடுதோர் என்பவரால் 2016 ஆம் ஆண்டில் இயக்குநர் மணிரெத்தினத்தின் திரைப்படங்களில் அடிக்கருத்துக்கள். என்ற தலைப்பில் ஓர் ஆய்வுக்கட்டுரையை எழுதப்பட்டுள்ளது. இவ்வாய்வில், இயக்குநர் மணிரெத்தினத்தின் திரைப்படங்களில் காதல், குடும்பம். அரசியல். சமுதாயம், நட்பு ஆகிய ஐந்து வகையான அடிக்கருத்துக்கள் பயன்படுத்தப்பட்டுள்ளதாகவும் அதிலும் குறிப்பாக, காதல் மற்றும் அரசியல் ஆகிய இரு அடிக்கருத்துகள் அவரது திரைப்படங்களில் மிகுதியாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது என்பது கண்டறியப்பட்டுள்ளது.

**ஆய்வு நெறி**

இந்த ஆய்வானது தரவுப்பகுப்பாய்வு பண்புசார் ஆய்வு (qualitative) நெறியை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது. சமூகவியலில் புதிய வரவாகிய திரைப்படம், தொலைக்காட்சி, வானொலி போன்றவற்றின் உள்ளடக்கத்தை ஆய்வு செய்தற்கும் இத்தரவுப்பகுப்பாய்வே ஏற்ற நெறியாக விளங்குகிறது. (Denzin & Lincoln, 2003). எனவே, 'ஆறிலிருந்து அறுபது வரை' திரைப்படத்தையும் மலேசியத் தமிழ் இலக்கியத்தில் வெளிப்படும் சமூகவியல் கருத்துக்களையும் ஆழமாகக் கண்டறிவதற்கு உள்ளடக்க ஆய்வு முறைமைக் கையாளப்பட்டுள்ளது (Peter Goodrich, 1986). ஆய்வுக்கு உட்படுத்தப்பட்ட 'ஆறிலிருந்து அறுபது வரை' திரைப்படத்தையும் மலேசியத் தமிழ் இலக்கியப் படைப்புகளையும் ஆய்வாளரே தேர்ந்தெடுத்துக் கொண்டார்.

**சமூகவியல் கோட்பாடு**

சமூகவியல் கோட்பாடு என்பது மனித சமூகம், சமூக நடவடிக்கைகள், நடத்தைகள், சமூக உறவுகள், சமூக அமைப்பு முறை, சமூக வாழ்க்கை முறையெனச் சமுதாயத்தை முன்னிறுத்தி நிகழப்பெறுகிறது. சமூகவியல் கோட்பாட்டினைப் பயன்படுத்தி சமுதாயப் பின்னணி, சமுதாயச் சித்தரிப்பு, சமுதாய மதிப்புகள், சமுதாயச் சிக்கல்கள், சமுதாயச் சிந்தனைகள், சமுதாய மாற்றங்கள் எனப் பல கோணங்களில் இலக்கியத்தைத் திறனாய்வு மேற்கொள்ளலாம். அவ்வகையில் இவ்வாய்வில் ஆறிலிருந்து அறுபது வரை திரைப்படத்திலும் மலேசியத் தமிழ் இலக்கியத்திலும் இடம்பெற்ற சமூகவியல் கருத்துக்களை ஆராயப்படுவதற்கு உறுதுணையாக விளங்குகிறது.

**'ஆறிலிருந்து அறுபது வரை' திரைக்கதைச் சுருக்கம்**

'ஆறிலிருந்து அறுபது வரை' திரைப்படமானது 1979 ஆம் ஆண்டு பஞ்சு அருணாசலத்தின் கைவண்ணத்தில் எழுதப்பெற்று, இயக்குநர் எஸ். பி. முத்துராமனால் இயக்கம் கண்டு குடும்பச் சமூகவியல் வாழ்க்கையை எடுத்துரைத்த சிறந்த படைப்புகளில் ஒன்றாக விளங்குகின்றது. இத்திரைப்படத்தில், சந்தானம் என்ற கதாபாத்திரம் தன் தந்தையின் எதிர்ப்பாரா இறப்பிற்குப் பின் தனது ஆறாவது வயதில் குடும்பச் சுமையை ஏற்றுக் கொள்ள வேண்டிய சூழ்நிலைக்குத் தள்ளப்படுகிறான். அந்நாள் முதல் தன் ஆசைகள் அனைத்தையும் துறந்து தன் தம்பி தங்கைக்காக வாழ்கிறான். குடும்பத்தின் தேவைகள் அதிகரிக்க அவனுடையச் சுமையும் பெருகிக் கொண்டே போகிறது. இந்தக் குடும்ப சூழ்நிலையில் கடன் என்கிற பள்ளத்தில் சிக்கி வாழ்க்கையில் எண்ணற்ற துன்பங்களைத் தன் மனைவி லட்சுமியுடன் சந்தித்து, ஒரு விபத்தில் மனைவியை இழக்கிறான். கதையின் இறுதியில், புகழ்பெற்ற எழுத்தாளராக மிளிர்கின்றார். பணமற்றவனாக இருந்தபோது தோள் கொடுக்காத உடன்பிறந்தோர்கள் செல்வச் செழிப்போடு அண்ணன் சந்தானம் மிளிர்ந்தபின் உறவாட விரும்புகின்றனர்.

**குடிப்பழக்கம்**

குடிப்பழக்கம் கற்றவர் முதல் கல்லாதவர் வரையிலும் இக்கலாச்சாரம் வேரூன்றி நிற்கிறது. அவ்வகையில் 'ஆறிலிருந்து அறுபது வரை' திரைப்படத்தில் சமுதாயத்தைச் சீரழித்து வரும் குடிப்பழக்கத்தையும் அதனால் ஒரு குடும்பச் சூழலில் ஏற்படும் இன்னல்களைத் திறம்பட காட்சியமைத்துள்ளனர். சான்றாக, சந்தானத்தின் தந்தையான மாணிக்கம் ஒரு சிறந்த குடும்பத் தலைவராக இருந்தாலும், தன் அலுவலகத்தில் வேலைப்புரியும் நண்பர்களுடன் இணைந்து குடித்துவிட்டு நிதானமற்று வீடு திரும்பும் வேளையில் விபத்தில் சிக்கி உயிரை இழக்கும் நிலை ஏற்படுகிறது. ஆகவே, குடும்பத் தலைவர் அற்ற சந்தானத்தின் குடும்பம் மனதளவிலும் பொருளாதார அளவிலும் சிக்கல்களை எதிர்நோக்க ஆரம்பிக்கின்றன. இவ்விடத்தில் மாணிக்கம் குடிப்பழக்கத்திற்கு அடிமையாகாமல் இருந்திருந்தால் சந்தானத்தின் குடும்பம் ஒரே இரவில் போராட்டம் நிறைந்த வாழ்க்கைச் சூழலுக்குத் தள்ளப்பட்டிருக்க மாட்டார்கள் என்ற சமுதாயச் சிந்தனையை இத்திரைப்படம் மக்கள் முன்னிலையில் எடுத்துரைக்கிறது.

மேலும், குடிப்பழக்கத்தை மலேசியத் தமிழ் இலக்கியத்திலும் பொருத்திப் பார்க்க இயல்கிறது. மலேசியச் சிறுகதையான 'அட்டைகள்' மற்றும் 'இரைகள்' வாயிலாக குடிப்பழக்கம் குடும்பச் சமூகவியல் வாழ்க்கையில் எத்தகையச் சிக்கல்களை உருவாக்குகிறது என்பதைச் சுட்டிக்காட்டுகிறது. சான்றாக, அட்டைகள் என்ற சிறுகதையில் குடும்பத் தலைவரான அழகிரி தன் கையில் பணம் புலங்கும் வேளையில் குடிப்பதோடு, குடிக்கும் பணத்தைச் சேமித்து வைக்க வேண்டும் என்ற சிந்தனையற்று விளங்குகிறார். அதே வேளையில், இரைகள் என்ற சிறுகதையில் லட்சுமியின் கணவர் குடித்துவிட்டு லட்சுமியை அடித்துக் காயப்படுத்தியத்தோடு அதிகளவு குடிக்கு அடிமையானதால் இருதயம் வெந்து இறக்க நேரிடுகிறது. கணவனின் இக்குடிப்பழக்கத்தால் லட்சுமி ஐந்து பிள்ளைகளைக் கையிலும் ஒரு பிள்ளையை வயிற்றில் சுமந்து பல்வேறு துன்பங்களுக்கு ஆளாகுகிறார். 'ஆறிலிருந்து அறுபது வரை' திரைப்படத்திலும் மலேசியச் சிறுகதைகளான அட்டைகள் மற்றும் இரைகளிலும் ஒரு தனி மனிதனின் குடிப் பழக்கத்தால் குடும்பத்தினரின் வாழ்க்கைச்சூழல் போராட்டமும் ஏமாற்றமும் நிறைந்த

வாழ்க்கையாக உருமாறுகிறது. ‘குடி குடியை அழிக்கும்’ என்ற சமுதாயச் சிந்தனையை இவ்விருப்படைப்புகளும் உணர்த்துகிறது.

**கல்விக்கு முக்கியத்துவம் வழங்க முடியாமை**

கல்வியே மனிதனின் வாழ்க்கையில் இருளைத் தகர்த்து வெளிச்சம் கொடுக்கக்கூடிய ஆயுதமாக விளங்குகின்றது. சமுதாயத்தில் அதிகளவு கவனம் தேவைப்படுகின்ற சமுதாயச் சிக்கலில் ஒன்றாக பள்ளி இடைநிற்றல் விளங்குகின்றது. ‘ஆறிலிருந்து அறுபது வரை’ திரைப்படத்தில் பள்ளி இடைநிற்றல் சிக்கலையும் அவை விளைவதற்க்குச் குடும்பச் சூழ்நிலையும் பின்னணியும் காரணமாகத் திகழ்வதைக் கண்டறிய இயல்கிறது. சான்றாக, சந்தானம் தன் தந்தையின் இழப்பால் குடும்பத்தைக் காக்கும் பொருட்டு ஆங்கில பள்ளியில் படித்துக் கொண்டிருந்தவன் தனது ஆறாவது அகவையில் தந்தையான மாணிக்கம் பணி புரிந்த அலுவலகத்தில் உதவியாளராக வேலைக்குச் சேர வேண்டிய நிலைக்குத் தள்ளப்படுகிறான். அதே நேரத்தில், சந்தானம் கல்வி கற்காமலிருந்தாலும், தன் சகோதரர்களை ஆங்கில பள்ளியில் சேர்த்துப் பயில வைப்பதின் வாயிலாகக் கல்விக்கு முக்கியத்துவம் வழங்க வேண்டும் என்ற சமுதாயச் சிந்தனையைத் இத்திரைப்படம் விதைக்கிறது.

மலேசியச் சிறுகதையான நா. மகேஸ்வரியின் உதிரும் அரும்புகளில் குடும்பச் சூழ்நிலையால் கல்விக்கு முக்கியத்துவம் வழங்காமல் விளங்குவதைக் காண இயல்கிறது. பரமசிவம் என்ற பள்ளி மாணவனின் தந்தை வீட்டைவிட்டு ஓடிவிட்டத்தாலும், தாய் நோயுற்றதாலும் தன் குடும்பத்தின் வறுமையின் காரணமாக, ஒரு வேளைப் பசியைப் போக்குவதற்காகத் தினசரி காலையில் "நாசி லெமாக்" கடையில் RM2 வெள்ளிக்காகப் பாத்திரம் கழுவுகின்ற பணியை மேற்கொண்டு தன் குடும்பத்தைப் பார்த்துக்கொள்ள வேண்டிய நிலைக்குத் தள்ளப்படுகிறான். அதுமட்டுமின்றி பரமசிவன் மாணவனாக இருந்தாலும் தன்னால் முடிந்த வேலையைச் செய்து குடும்பத்தைப் பாதுகாக்க முனைகிறான்.‘ஆறிலிருந்து அறுபது வரை’ திரைப்படத்தில் பள்ளி இடைநிற்றலையும் உதிரும் அரும்புகளில் பள்ளிக்குச் சென்றாலும் கவனம் செலுத்த முடியாமையைக் காண இயல்கிறது.

**வறுமையில் வாடும் சமூகம்**

வறுமை என்பது வாழ்விற்கு அடிப்படைத் தேவையான உணவு, உடை, தங்கும் இடமற்று வாழும் நிலையாகும் ‘ஆறிலிருந்து அறுபது வரை’ திரைப்படத்தில் சந்தானத்தின் வாழ்க்கையின் வாயிலாக வறுமையின் கோரத்தைக் காண இயல்கிறது. சான்றாக, சந்தானத்தின் வேலை இழப்பு ஏற்பட்டதின் பிறகு, தன் பிஞ்சு குழந்தைக்குப் பால் மாவு வாங்க இயலாமல் பால் பவுடர் டின்னைக் கழுவி தன் குழந்தைக்குப் பால் கொடுக்க நேரிட்டது. மேலும், ஒரு வேளை உணவிற்காக வீட்டியிலிருந்த தம்பிகளின் வெற்றி கோப்பைக்களை விற்றுச் சாப்பிடும் அவல நிலைக்குத் தள்ளப்பட்டத்துடன் வீடற்று நிற்கும் நிலைக்கும் தள்ளப்பட்டனர். சான்றாக, ஒரு வருடமாக வாடகைக் வழங்க இயலாததால் வீட்டைவிட்டு பச்சைக் குழந்தையைத் தூக்கிக் கொண்டு செல்லும் நிலை உருவாகின. இக்காட்சியமைப்பிலிருந்து வறுமையின் அவலத்தைக் காண இயல்கிறது.

மலேசியத் தமிழ் இலக்கியத்திலும் இதே சிக்கலைக் காண இயல்கிறது. ‘உதிரும் அரும்புகளில்’, பரமசிவம் 2 வெள்ளிகாகப் கடையில் மங்கு கழுவுகின்ற வேலையைப் பார்ப்பதோடு, பள்ளியில் வழங்கும் அரை வேக்காடாக இருக்கும் உணவை முதல் ஆளாக உண்ணுபதிலிருந்து அவனது பசியின் கொடுமையையும் வறுமையில் கோரத்தையும் அறிய இயல்கிறது. அதே வேளையில், ‘விடியலை நோக்கி’ என்ற சிறுகதையில் மாணவர்கள் பணம் கொடுத்து பள்ளி சீருடையை வாங்க முடியாமையால் அதில் ஊக்கு குத்திக்கொண்டு வருகிறார்கள். மேலும், காலையில் ஒன்றும் சாப்பிடமா வருவதால் பசி வயிற்றைக் கிண்டும் கஷ்டமாக இருக்கும் என்று ஒரு மாணவி குறிப்பிடுகையில் மாணவர்கள் எத்தகைய வறுமையில் கல்வி கற்கிறார்கள் என்பதைக் காண முடிகின்றது. ‘ஆறிலிருந்து அறுபது வரை’ திரைப்படத்திலும் இவ்விருச்சிறுகதைகளிலும் வறுமையான சூழலில் வாழும் சமூகத்தின் அவலத்தை முன்னிறுத்துகிறது.

**அன்பைப் போற்றாத குடும்ப உறவுகள்**

‘ஆறிலிருந்து அறுபது வரை’ திரைப்படத்தில் அன்பை போற்றாத குடும்ப உறவுகளைக் காண இயல்கிறது. சந்தானம் ஆறுவயதிலே குடும்பப் பொறுப்புகளைச் சுமந்து தன்னுடையக் கல்வி, ஊண் உறக்கம், இன்பம் அனைத்தையும் இழந்து பணத்திற்காக அல்லும் பகலும் ஓடி உழைத்தான் ஆனால் தம்பிகளும் தங்கைகளும் அவனுடைய அன்பிற்குப் பாத்திரமானவராக அல்லாமல் சுயநலவாதிகளாகவே காட்சியளித்தனர். சந்தானம் தன் தங்கையின் திருமணத்திற்காகக் கடன் பெற்றும் தன்னால் இயன்றதைத் திருமணத்திற்குக்காக்கத் தங்கச் சங்கிலி, காப்பு மற்றும் புடவைகளை வாங்கி வரும்பொழுது தன்னுடைய அண்ணன் எவ்வளவு கடினப்படுகிறார் என்பதைச் சற்றும் பாராமல் பணத்திற்கும் பொருளுக்கும் முக்கியத்துவம் வழங்குவதைக் காண இயல்கிறது. அதே வேளையில், சந்தானம் வறுமையின் சிக்கியிருக்கும் நேரத்தில் தங்கையிடம் உதவி கேட்கச் சென்றபோது தன் கணவன் வீட்டில் இல்லையென்று பொய் உரைத்து உதவ மறுத்தாள் மேலும், தம்பி இராமுக்கு அனுப்பிய கடிதத்தை அவரது தம்பியின் மனைவி கிழித்து வீசி விடுகிறாள். இத்திரைப்படத்தில் வெளிப்படும் சிந்தனை யாதென்றால் குடும்ப உறவுகளின்மீது அன்பு செலுத்த வேண்டும்.

இதுப் போன்ற சூழல் மலேசியாவில் நடந்த வண்ணமாகத்தான் இருக்கின்றது என்பதை மலேசியச் சிறுகதையான ‘கிழிசல்’ எடுத்துரைக்கிறது. சான்றாக, திருமதி ரெட்டினம் அன்பைவிட பணத்திற்கும் பதவிக்கும் அதிக முக்கியத்துவம் வழங்குபவர். வீட்டின் பணிப்பெண்ணான அம்மினி திருமதி ரெட்டினத்தை அதிக அன்புடன் பார்த்துக்கொண்டாலும், பணிப்பெண்ணைத் திட்டித் தீர்க்கும் வழக்கத்தைக் கொண்டுள்ளார். கதையின் உச்சத்தில் தான் முக்கியத்துவம் வழங்கிய சங்க உறுப்பினர்கள் அவமானம் படுத்தும் பொழுது தான் அம்மினியின் உன்னதமான அன்பைப் புரிந்து கொள்ள இயன்றது. இருப்படைப்புகளிலிருந்தும் நம்மால் உணர முடிவது யாதென்றால் பணம் பல வேளையில் அன்பை உதாசின படுத்துகின்றன. நாம் வாழ்க்கையில் அன்பு செலுத்துபவருக்கு நாம் அன்பு செலுத்தாமல் இருந்தாலும் பரவாயில்லை ஆனால் உறுதியாக, பணத்தை ஒரு பொருளாய்க்காட்டி அவர்களைக் கீழ்மைப்படுத்தக் கூடாது. எனவே, பாசத்திற்கு முன்னுரிமை வழங்க வேண்டுமே தவிர

பணத்திற்கு அல்ல என்றதை உணர வேண்டும் என்பதை விதைக்கிறது (Ravindaran, etl,2022).

**மேல் வர்கத்தினரின் ஆதிக்கம்**

'ஆறு முதல் அறுபது வரை' திரைப்படத்தில் ஆறுவயது முதல் சந்தானம் தன் குடும்பத்தின் பொருளாதாரத் தேவைக்காக வேலைக்குச் சேர்ந்தான். அன்று முதல் தன்னுடைய கடின உழைப்பால் அந்த அலுவலகத்தில் அச்சு ஓட்டும் பணிகளைச் செய்து வந்தான். அந்த நிறுவனத்தின் முதலாளி சந்தானத்திற்கு ஊதியத்திற்கு மேல், அவனுடையக் கடினத்தை அறிந்து கேட்க்கும் போதெல்லாம் பணம் வழங்கி உதவி செய்தார் ஆனால் முதலாளியின் மகன் அந்த அலுவலகத்தில் வேலைச் செய்த நாயுடுவின் சந்தானத்தைப் பற்றிய தவறான கூற்றைச் தீர விசாரிக்காமலும் சந்தானத்தின் குடும்பச் சூழலைச் சற்றும் சிந்தித்துப் பார்க்காமல் வேலையைவிட்டு நிறுத்தம் செய்தார். இதிலிருந்து வெளிப்படும் சிந்தனை யாதென்றால் முதலாளிகள் தொழிலாளர்களின் இன்னல்களை அறிந்துக் கொண்டு உறுதுணையாக இருக்க வேண்டும் என்பதாகும்.

மேல் வர்க்கத்தினரின் ஆதிக்கத்தை மலேசியா சிறுகதைகளில் காண இயல்கிறது. 'அட்டைகள்' என்ற சிறுகதையில், அழகிரியின் உபரி வருமானமும் தன் மனைவிக்கு வேலை இல்லாமல் போனதால் ஒரு வேலை சோற்றுக்கு அவதிப்படும் அவலநிலை ஏற்பட்டதுடன் மகனைக் கல்வி கற்க அனுப்ப முடியாத நிலை ஏற்பட்டது. மேலும், 'இரைகள்' சிறுகதையில், லெட்சுமி தன் கணவனை அடக்கம் செய்வதற்குப் பணம் இல்லாமல் தோட்ட மக்களிடம் பணம் திரட்டி இறுதிச் சடங்கை மேற்கொள்ளும் அவல நிலை ஏற்பட்டது. தொடர்ந்து, இச்சிக்கலை, 'தரிசம்' என்ற சிறுகதையிலும் கோடிட்டுக் காண இயல்கிறது. பத்துமலை என்பவர்க்கு அவர் வேலைச் செய்யும் கோவில் நிறுவனம் மனித உழைப்பிற்கு மதிப்பு வழங்காமல் பணத்திற்கு முக்கியத்துவம் வழங்கியதால் பத்துமலைக்குப் பல மாதங்களாகச் சம்பளம் வழங்காமல் உதாசினப்படுத்தப்பட்டார். எனவே, முதலாளி வர்க்கத்தினர் தன் வேலையாட்களின் உழைப்பிற்கு மதிப்பு அளிக்க வேண்டும்.

**பொருளாதாரச் சிக்கல் (கடன்)**

‘ஆறிலிருந்து அறுபது வரை’ திரைப்படத்தில் காணப்படும் சந்தானத்தின் வாழ்க்கையில் வெளிப்படும் குடும்பச் சூழலின் காரணத்தால் பெருவாரியாகப் பொருளாதார சிக்கலுக்கு ஆளாகுகிறான். ஆறு வயதில் தொடங்கி தன் தம்பி தங்கைகளை ஆங்கில பள்ளியில் படிக்க வைத்த நாள் முதல், வீட்டின் அன்றாட உணவுத் தேவைகள், தம்பி தங்கைகளின் மேற்படிப்பு. குறிப்பாக, சந்தானம் கல்வியை 6 வயதில் துறந்ததால் அதிக வருமானம் ஈட்டக்கூடிய சூழ்நிலையும் அமையவில்லை. குடும்பத்தின் பொருளாதாரத் தேவை அதிகரித்தது ஆனால் வருவாயின் நிலை ஏற்றமடையவில்ல சான்றாக, சந்தானம் குடும்பத் தேவைகளுக்கு அளவிற்கு மீறிய கடனைப் பெற்றதாலும், தன் தங்கையின் திருமணத்திற்குத் தன் தரத்திற்கு மேல் கடன் பெற்றது சந்தானத்தைக் கடன் சுமையில் தத்தளிக்கும் நிலைக்குத் தள்ளியது. மலேசியா சிறுகதையான ‘வலியில்’ எழுத்தாளர் நாயகி சரளா தன் காதலரான தியாகுவை அதிக செலவு இல்லாமல் சிக்கனமாகத் திருமணம் செய்து கொள்கிறாள். இதிலிருந்து பெறப்படும் சிந்தனை யாதென்றால் வரவுக்கு மீறீய செலவும் அதிகளவு கடனும் பெறக்கூடாது என்பதை விதைக்கிறது.

**முடிவுரை**

‘ஆறிலிருந்து அறுபது வரை’ திரைப்படத்தில் சமூகவியல் கருத்துக்களான சமுதாயச் சிக்கல்கள் மற்றும் சமுதாயச் சிந்தனைகள் எடுத்துரைக்கப்பட்டுள்ளது. இவ்வாய்வில் குடிப்பழக்கம், கல்விக்கு முக்கியத்துவம் வழங்க முடியாமை, வறுமையில் வாடும் சமூகம், அன்பைப் போற்றாத குடும்ப உறவுகள், மேல் வர்க்கத்தினரின் ஆதிக்கம், பொருளாதாரச் சிக்கல் (கடன்) ஆகிய ஆறு சமூகவியல் கருத்துக்கள் கண்டறியப்பட்டுள்ளதுடன் மலேசியத் தமிழ் இலக்கியத்தில் இச்சமூகவியல் கருத்துக்கள் எவ்வாறு வெளிப்பட்டுள்ளது என்பதையும் காண இயல்கிறது. இவ்வாய்வின் முடிவாக, ‘ஆறிலிருந்து அறுபது வரை’ திரைப்படத்தில் வெளிப்படுத்தும் சமூகவியல் கருத்துக்களை மலேசியத் தமிழ் இலக்கியத்தில் காணப்படுகிறது.

**Reference**


Bordwell, D., Thompson, K., & Smith, J. (2010). *Film art: An introduction* (Vol. 9). New York: McGraw-Hill.

Kandasamy, S. S., & Muniandy, R. (2017). 'The Social Ill-Fames 0f Malaysian Film Aandal", *Journal of Tamil Peraivu*, *5*(1), 20-31.

Lincoln, Y. S., & Denzin, N. K. (Eds.). (2003). *Turning points in qualitative research: Tying knots in a handkerchief*. Rowman Altamira.

Ravindaran, M., Silllalee, K., & Kannappan, A. (2022). Sociological Ideas Displayed in the Poem 'Thirunthinarillai'by Poet Muthupandian: A Study, Journal *of Tamil Peraivu*, *11*(1), 94-101.

Parthiban, V., & Ramespran, K. (2020). VeedhumVizhutugalum: A Sociological Analysis, *Journal of Tamil Peraivu*, *9*(2), 68-74.

Peter Goodrich. (1986). Reading the Law: ACriticul Introduction to Legal Method and Technique. U.K.: Blackwell Publishers.

Sandrakumaran, S., & Rama, M. (2020). "Historical Socio-Political Struggles of Indian Rubber Plantation Worker as Portrayed in the novel Mann Maatram", *Journal of Tamil Peraivu*. 9(1), 142-149.

Silllalee, K., Rajantheran, M., & Matana, K. (2020). "Malaysia Inthiyargalidayee Kundar Kumbal Sikkal: Ethirkalam Thiraipadam Oor Aayvu", *Journal of Valartamil*, *1*(2), 74-83.

Sinaiah, S., & Sonfada, U. N. (2021). Māslōviṉ camūka maṟṟum poruḷātāra pātukāpput tēvai nōkkil malēciyat Tamiḻ ciṟukataikaḷ [Maslow's theory of social needs and economic safety needs in Malaysian Tamil short stories]. *Muallim Journal of Social Sciences and Humanities*, 116-125.

Ratnasababathi Premkumar. (2019). Thiraipadakalai Oor Pinavinathuva Aaivu. https://www.digital.lib.esn.ac.lk123456789/4191

iTunes. (2017). Iyakunmar maniratnathin Thiraipadangkalil adikaruthugal. 5th South Eastern University Arts Research Session 2016 on "Research and Development for a Global Knowledge Society". 17 January 2017. South Eastern University of Sri Lanka, Oluvil, Sri Lanka. http://ir.lib.seu.ac.lk/handle/123456789/2168